1975 அக்டோபர் 30]

குறிப்பிடுவது அந்த இடமாக இருக்காது என்று கருதுகிறேன் எனவே, அந்த இடத்தில் ஆற்றின் கரையைப் பலப்படுத்தி, இடையூறுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் தயாரித்திருக்கிறார்கள். வேறு தகவல் ஏதாவது இருந்தால், அதைத் தெரிவித்தால் அரசாங்கம் அதன்மீது நடவடிக்கை எடுக்கும்.

நாட்டறம்பள்ளி துணை வட்டம்

* 133 வினா—**திரு. ஜி. ராமசாமி:**

திரு. டி. சி. திம்மராயக் கவுண்டர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டறம்பள்ளியை துணை தாலுக்காவாக மாற்றும் யோசனை அரசுக்குண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) நாட்டறம்பள்ளியை துணை தாலுக்காவாக மாற்றும் யோசனை அரசிடம் இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி: தலைவரவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்னால் மாவட்டங்கள், வட்டங்கள் பிரிக்கப்பட்டன. இப்போது மக்கள் தொகை கூடியிருக்கிறது. வருமானமும் அதிகரித்திருக்கிறது. திருப்பத்தூர் வட்டம் மிகப் பெரிய வட்டமாக இருப்பதால் நாட்டறம்பள்ளியை ஒரு துணைவட்டமாக அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாவட்ட ஆட்சித் தலைவர் இப்போது தேவை இல்லை என்ற குறிப்பை அனுப்பி இருக்கிறார்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் இப்போது இல்லை என்று சொன்னாலும் வடாற்காடு மாவட்டம் பெரிய மாவட்டம். ஆகையால் அதை இரண்டாகப் பிரித்து, திருவண்ணாமலை மாவட்டம் என்று ஒரு தனி மாவட்டம் அமைக்கப்படுவதாகப் பேசப்படுகிறது. அது உண்மையா?

அப்படியானால் திருவண்ணாமலை மாவட்டத்தில் எந்தெந்த தாலுகாக்கள் சேரும் என்ற செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி ஏதாவது திட்டம் இருக்குமானால் அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

தோவாளை வட்டத்திலுள்ள கிராமங்கள்

* 134 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தோவாளை, செண்பகராமன் புதூர், திருப்பதிசாரம் என்ற மூன்று கிராமங்களையும் இயற்கைக்கொப்ப எல்லைகளை புனரமைப்புச் செய்வதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொருள் பற்றி செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

Deposits of Platinum and Gold in Salem district.

* 135 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether it is a fact that large deposits of Platinum and Gold are found in chalk hills in Salem district; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) சேலம் மாவட்டம், சுண்ணாம்பு மலையில் பிளாட்டினம், தங்கம் ஆகியவற்றின் படிமங்கள் பெருமளவில் காணப்படவில்லை. 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கனிப் பொருள் வளர்ச்சித் திட்டம் மேற்கொண்ட முறையான புவியியல் ஆய்வின்போது, தோராயமாக 15 சதுர கிலோமீட்டர் பரப்பிற்கு தங்கத்துடன் பிளாட்டினம் சேர்ந்திருப்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும், பிளாட்டினத்தைப் பிரித்தெடுப்பது என்பது ஆதாயம் தரத்தக்கதாயில்லை.